தினமலர்
DINAMALAR
National Tamil Daily

# உலக காடுகள் தினத்தன்று மரக்கன்றுகள் நடும் விழா



**கோவை, மார்ச் 21–**

கோவை வன மரபி
யல் மற்றும் மரப்பெ
ருக்கு நிறுவனத்தில்
(ஐ.எப்.ஜி.டி.பி.,),
உலக காடுகள் தினத்தை
முன்னிட்டு, மரக்கன்று
கள் நடும் விழா நேற்று
நடந்தது.

ஐ.எப்.ஜி.டி.பி.,இயக்
குனர் குஞ்சுகண்
ணன், மரக்கன்று நட்டு
நிகழ்வை தொடங்கி
வைத்தார். நாட்டு
மரங்களை வளர்ப்ப
தன் வாயிலாக, சுற்றுச்
சூழலை பாதுகாக்க
முடியும், என்ற விழிப்பு
ணர்வு சுவரொட்டியை
அவர் வெளியிட்டார்.

தொடர்ந்து அவர்
பேசுகையில், ''மரங்கள்
மனித குலத்துக்கு வழங்
கப்பட்ட மிக அருமை
யான பரிசு. எனவே,
மரங்களை பாதுகாப்பது
மனிதர்களின் கடமை.
உலக காடுகள் தினத்
தில் இந்தாண்டுக்கான
கருப்பொருள், 'காடு
மற்றும் ஆரோக்கியம்'
ஆகும். எனவே, வளம்
நிறைந்த காடுகளின்
பாதுகாப்பு மற்றும் மறு
சீரமைப்புக்கு, அதிக
முன்னுரிமை அளிக்க
வேண்டும்,'' என்றார்.

தொடர்ந்து,
முதன்மை விஞ்ஞானி
கண்ணன் வாரியர்,
இந்தியன் ஆயில் கார்ப்
பரேஷன் லிமிடெட்
கோவை மண்டல முது
நிலை மேலாளர் சரவ
ணன் விழிப்புணர்வு
உரை நிகழ்த்தினர்.

விழாவில், மாணவ,
மாணவியர் பலரும் மருத்
துவ குணம் கொண்ட
மற்றும் பழமை வாய்ந்த
மரக்கன்றுகளை, தாவரவி
யல் பூங்காவில் நட்டனர்.

17. News in Dinamalar, Coimbatore, 22.03.2023, Observance of International Day of Forests by ICFRE- IFGTB EIACP.